*The World's Largest Open Access Agricultural & Applied Economics Digital Library*

**This document is discoverable and free to researchers across the globe due to the work of AgEcon Search.**

**Help ensure our sustainability.**

Give to AgEcon Search

AgEcon Search
http://ageconsearch.umn.edu
aesearch@umn.edu

*Papers downloaded from **AgEcon Search** may be used for non-commercial purposes and personal study only. No other use, including posting to another Internet site, is permitted without permission from the copyright owner (not AgEcon Search), or as allowed under the provisions of Fair Use, U.S. Copyright Act, Title 17 U.S.C.*

பாசன மேலாண்மை மாற்றம் நிலைமை - இந்தியா

# பாசனம் பயன்படுத்துவோர் சங்கம்
# தாசிமாமந்தார் ஏரி
# விவசாயிகளின் அனுபவம்

*கி. சிவானந்தம்*

இந்திய மேலாண்மை நிறுவனம், அகமதாபாத்

IIMI

IIMI, 1995

பன்னாட்டுப் பாசன மேலாண்மை நிறுவனம், கொழும்பு

டிசம்பர் 1995

H 19455 C2

© இந்திய மேலாண்மை நிறுவனம், அகமதாபாத் 1995 (IIMA)
பன்னாட்டு பாசன மேலாண்மை நிறுவனம், கொழும்பு 1995 (IIMI)

பதிப்புரிமை பெற்றது

தகவலுக்கும், விமர்சனத்திற்கும் தயவு செய்து அனுகவும் :
செய்தி தொடர்பகம்
பன்னாட்டு மேலாண்மை நிறுவனம்
த.பெ.எண் 2075
கொழும்பு
இலங்கை

# முன்னுரை

இக்கையேடு பாசனம் பயன்படுத்துவோர் சங்கம் அமைக்கவும் அதன் மேலாண்மைக்கும் உழவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளைச் சுருக்கமாக விளக்கும் தொடரில் ஒன்றாகும். இவ்வுழவர்களின் முயற்சிகளைப் பற்றிய சுருக்கமான, எளிமையான, சுவையான செய்திகள் மாநிலத்தின் பிற பகுதிகளிலுள்ள விவசாயிகள் பாசன சேவைகளைப் பெறுவதற்கு வழிகாட்டும் என்பதே இத்தொடரின் நோக்கம். இந்த ஆராய்ச்சி ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் வெளியிடப்பட்டுள்ளது. இத்தொடரின் பிற நிகழ்வுப் படைப்புகள் பின் அட்டையில் தரப்பட்டுள்ளன.

இந்த அனுபவத்தை IIMA, IIMI குழு உறுப்பினர்களின் வழிகாட்டலுடன் கி. சிவானந்தம் எழுதினார். அவர் இதில் குறிப்பிடப்பட்டுள்ள உழவர்களோடு அக்டோபர் 1994 முதல் ஏப்ரல் 1995 வரை உடனிருந்தார். அங்கிருந்தபோது அவர் உழவர்களைக் கேட்டறிந்தும் நிகழ்வுகளைக் கண்ணுற்றும் இப்பகுதியில் பாசன சங்கம் அமைத்த விதம், அதன் பாசன மேலாண்மைச் செயற்பாட்டில் மாற்றம் ஆகியவற்றைப் பதிவுசெய்தார். இங்கு கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் உழவர்களின் எண்ணங்களையும், ஆலோசனைகளையும் எடுத்துக்காட்டுபவையாகும்.

சிவானந்தத்தின் இந்த முயற்சி 1993 முதல் 1995 வரை இந்திய மேலாண்மை நிறுவனம் அகமதாபாத்தும் (IIMA), பன்னாட்டுப் பாசன மேலாண்மை நிறுவனம் (IIMI ) கொழும்பும், இணைந்து ஃபோர்ட் குழும நிதிஉதவியோடு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் ஒரு பகுதியாகும். இந்த ஆராய்ச்சி அரசு மற்றும் அரசு அல்லா நிறுவனங்களும், அரசிடமிருந்து உழவர்களுக்குப் பாசன மேலாண்மை மாற்றம் ஏற்படுத்தும் வகையில் மேற்கொண்ட கொள்கைகளையும் செயற்பாடுகளையும் ஆய்வு செய்து பதிவு செய்யப்பட்டவையாகும். இதன் முழு நோக்கம் இந்தியாவின்

பாசன மேலாண்மை மாற்றத்திற்குத் தேவையான சீரிய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்க வழிகோலுவதாகும். இவ்வாராய்ச்சிக் குறிப்புகள் இந்த சிறு நிகழ்வுத் தொடர்களோடு கூட ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவும் பிற வடிவங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் முதன்மை ஆராய்ச்சியாளர்கள் IIMA வைச் சேர்ந்த **சசிகோலவல்லி, அமர்லால் கால்ரோ, கோபால் நாய்க், S, ராம்நாராயன்** மற்றும் IIMI ச் சேர்ந்த **ஜெப்ரி டிபுரூவர், R. சக்திவடிவேல், K.V. இராஜு** ஆகியோராவர். **சாமி சுப்பிரமணியன்** இந்நூலின் தொகுப்பாசிரியர். அவரால் தமிழில் உருவாக்கப்பட்ட நூல்வடிவம் அவராலேயே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு ஆராய்ச்சிக்குழுவால் குறிப்பாக **ஏ. எச். கால்ரே, ஆர். சக்திவடிவேல்** ஆகியோரால் பரிசீலிக்கப்பட்டது.

**சிவானந்தத்துடன்** சேர்ந்த இந்த ஆராய்ச்சிக்குழு, எந்த பலனும் எதிர்பார்க்காது நல்கிய உபசரிப்புகளுக்கும் தங்களை அணுகிய நேரங்களில் நினைப்பையும் நேரத்தையும் செலவிட்டதற்கும், சலிப்பேரி கிராம மக்களுக்கும், அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர்களின் அனுபவம் மற்றையோருக்கு பலனளிக்கும் என நம்புகிறோம்.

**ஜெப்ரி டி. புரூவர்**
IIMI

**கோபால் நாய்க்**
IIMA

# தூாசி மாமந்தூர் பாசன நீர்பயன்படுத்துவோர் சங்கங்கள்: விவசாயிகளின் பங்கு

## பொருளடக்கம்



| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தூசி ஏரித்திட்டம் | 1 |
| 2 | நீர் பயன்படுத்துவோர் சங்கம் அமைப்பு | 3 |
| 3 | நீர் ஆதாரமும் பயிரித்திட்டமும் | 7 |
| 4 | ஏரி நீர்ப் பங்கீடு | 9 |
| 5 | பாசனப் பிரிவு | 11 |
| 6 | வடகால் பாக்கத்தின் பாசன நிர்வாகம் | 13 |
| 7 | நிலத்தடிநீர் உபயோகம் | 16 |
| 8 | சங்க நிதி ஆதாரம் | 16 |
| 9 | சச்சரவுகளை தீர்த்தல் | 17 |
| 10 | வாய்க்கால் சீரமைப்பு | 18 |
| 11 | விளைவும் பயனும் | 19 |
| | இணைப்பு 1. பாசனப் பகுதியில் கிணறுகள் | |
| | இணைப்பு 2 அருஞ்சொல் விளக்கம் | |

# தூசி மாமந்தூர் பாசன நீர்பயன்படுத்துவோர் சங்கங்கள்: விவசாயிகளின் பங்கு

தமிழ்நாட்டில் பாசன மேம்பாட்டில் உழவர்களின் பங்கு தொன்மையானது. சிறு ஓடையில் ஒரு கல்லை வைத்துத்தேக்கிப்பாசனம் மேற்கொண்ட தொன்மைக்காலம் தொட்டு, ஓடுகின்ற நீரைப்பெரிதாகத் தேக்கிப்பாசனத்திற்குப் பயன்படுத்தும் பாங்கு, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வந்துள்ளது. இத்தகைய ஒவ்வொரு நிலையிலும் பயன்படுத்துவோர் பங்கு முழுமையாக இருந்ததாகத் தான் தெரிகிறது. அந்நாளில் அரசர்கள் நீர் நிலைகளைப் பெருக்கிய போது இதில் பொது மக்களை ஈடுபடுத்தினார்கள். அந்த நீர் நிலைகளை சீரமைக்கும், பயன்படுத்தும் பொறுப்பு பயன்படுத்துவோரிடமே நீண்ட நாள் இருந்து வந்திருக்கிறது. பெரும் தேக்கங்கள் அமைக்கவும், அணைகள் எழுப்பவும் ஆங்கில அரசால் பொதுப்பணித் துறை ஏற்படுத்தப்பட்டதும் பொதுமக்களின் ஈடுபாடு குறையத் தொடங்கியது. சுதந்திரத்திற்குப் பிறகு அரசியல் ஈடுபாடு அதிகமானதன் காரணமாக, கிராமங்களில் தொன்றுதொட்டு இருந்து வந்த சமுதாய அமைப்புகள் சிதையத் தொடங்கின. எல்லாவற்றிற்கும் அரசை எதிர்நோக்கும் நிலை உருவானது என்றாலும் ஒரு சில இடங்களில் பாசனதாரர்களே அமைத்துக்கொண்ட பாசன அமைப்புகள் பல ஆண்டுகளுக்குப் பிறகும் செம்மையாகவே செயல்பட்டு வருகின்றன.

## தூசி ஏரித்திட்டம்

தூசிமாமண்டூர் ஏரி மிகத் தொன்மையானது. இது தமிழகத்தில் உள்ள ஏரிகளில் செம்பரம்பாக்கத்திற்கு அடுத்த மிகப் பெரிய ஏரியாகும். தூசி, மாமண்டூர் ஆகிய இரு கிராமங்களின் மேற்குப் பகுதியில் உள்ள இரு குன்றுகளுக்கு இடையே தாழ்வான பகுதியில் ஒரு அணை எழுப்பி சுமார் 18 கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்கும் வகையில் ஒரு ஏரியை அமைத்த பெருமை மகேந்திர பல்லவனைச் சேரும். அவன் ஆட்சி புரிந்த காலம் கி. பி. 600. இரு குன்றுகளுக்கு இடையே கட்டப்பட்ட மண் அணையின் நீளம் 1.5 கி.மீ. ஏரியின் வலப்புறம் இருக்கும் மூன்றாவது குன்றுக்கு இரண்டு மீட்டர் நீளம் இணைப்பு உள்ளது.

ஏரி உருவாக்கப்பட்டு 10 நூற்றாண்டுகளுக்குப் பிறகு காகுண்டியில் அரசோச்சி வந்த திவான் தாமல் வெங்கப்ப நாயுடுவால் ஏரி சீரமைப்பு செய்யப்பட்டது. கரை பலப்படுத்தப்பட்டது. காகுண்டி என்பது தற்போதைய நெல்லூர் (ஆந்திரப் பிரதேசம்) மாவட்டமாகும்.

சுமார் 13 ச.கி.மீ. நிலப்பரப்பில் பரவி நிற்கும் இந்த ஏரி, நீர் நிரம்பியிருக்கும் போது, ஒரு கடல் போல காட்சியளிக்கிறது. இதன் நடுப்பகுதியின். ஆழம் 30 அடிக்கு மேல் எழும் போது 180 கோடி கன அடி நீர் இதில் தேங்கி நிற்கும். இதைச்சுற்றிலும் 30 ச.கி.மீ. பகுதியில் பெய்யும் மழை நீர் நேரடியாக இந்த ஏரியில் வந்து சேர்கிறது. ஏரியின் நீர்வரத்தை அதிகரிக்க ஆற்றுடன் இணைப்புள்ளது ஆதலின் இது சிஸ்டம் ஏரியாகும். இதன் நீர்ப்பிடிப்பகுதி 297 ச.கி.மீ. இந்த ஏரி மூலம் 1667 எக்டேர் பாசனம் பெற வாய்ப்பு இருக்கிறது.

**நீர் வரத்து ஆதாரங்கள்** இந்த ஏரியின் தனி நீர் பிடிப்பரப்பு 30ச.கி.மீ. கூட்டு நீர் பிடிப்பரப்பு 297 ச.கி.மீ. இந்த நீர் பிடிப்பகுதிகளில் இருந்து மட்டும் ஏரிக்கு மழைக்காலத்தில் குறிப்பாக வடகிழக்குப் பருவ மழைக்காலத்தில் தண்ணீர் வந்து பாசனம் செய்யப்படுகிறது. பாலாறு நீர்ப் பாசனத் திட்டம் (கி.பி.1896) செயலாக்கப்பட்ட பின் பாலாற்றில் இருந்து இரண்டு கால்வாய்கள் மூலம் தூசிமாமண்டூர் ஏரிக்கு தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டது. பாலாறு ஆற்று மூலமாக நீர் வரும் முக்கிய கால்வாய், ராஜாக்கால் கால்வாய், இந்தக் கால்வாயில் நொடிக்கு 20.38 க.மீ. தண்ணீர் வருமாறு வடிவமைக்கப்பட்டது. பாலாறு அணைக்குக் கீழே 20.8-வது கி.மீட்டரில் பிரியும் இக்கால்வாயின் மொத்த நீளம் 14 கி.மீ. ராஜாக்கால் கால்வாய் மூலம் நேரடியாகத் தண்ணீர் ஏரிக்குக் கிடைக்கிறது.

பாலாறு அணைக்கட்டிலிருந்து பிரியும் சக்கமல்லூர் கால்வாய், தான் செல்லும் பகுதியில் சில சிறு தொடர் ஏரிகளுக்கு நீர் கொடுத்து இறுதியாக வெங்கலத்தூர் ஏரியில் கலக்கிறது. வெங்கலத்தூர் ஏரியின் மிகுதி நீர் ராஜாக்கால் வாய்க்காலின் இரண்டாவது கி.மீட்டரில் இணைகிறது.

பாலாறு அணைக்கட்டிலிருந்து பிரியும் மற்றொரு கால்வாயான தென்னம்பட்டு கால்வாய், பல தொடர் ஏரிகளுக்கு நீர் அளித்த பின்

இறுதியாக ஒழுகவாக்கம் ஏரியில் கலக்கிறது. ஒழுகவாக்கம் ஏரியின் மிகுதி நீரும் ராஜாக்கால் கால்வாயில் இணைகிறது.

ஏரியின் தாழ்வான பகுதியில் தூசியில் ஒன்றும் மாமண்டூரில் ஒன்றுமாக இரண்டு மதகுகளும், வலப்புறம், இடப்புறம் என சற்று மேட்டுப் பகுதியில் ஒவ்வொன்றுமாக இரண்டும் மொத்தம் 4 மதகுகள் உள்ளன. அணையின் இடது கரையில் பெரும் மழைக்காலத்தில் வரும் வெள்ள நீர் வெளியேற்றத்திற்காக இரண்டுகலிங்குகள் கட்டப்பட்டுள்ளன. இந்த இரண்டு கலிங்குகளின் நீளம் 1) 116 மீட்டர், 2) 72 மீட்டர்.

பாசனப் பகுதியின் நில அமைப்பு இரு புறங்களில் இருந்தும் மையப்பகுதியை நோக்கி லேசான சரிவு கொண்டுள்ளது. அணையின் இரு ஓரங்களிலும் உள்ள மேட்டு மதகுகள் திறக்கப்பட்டால், இடப்புறமும், வலப்புறமும், பாய்ந்து மையப் பகுதியில் உள்ள வடிகால் வாய்க்காலில் நீர் கசியுமாறு அமைந்துள்ளது. இந்த ஏரி பராமரிப்பில் மேட்டு மதகுகளில் தண்ணீர் வற்றும் வரை தாழ்வுப் பகுதி மதகுகள் திறக்கப்படக் கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த இரண்டு புற வாய்க்கால்களுமே, முழு பாசனப் பகுதிக்கும் பாசனம் அளிக்கும் வகையில் உள்ளன. கசிந்து வரும் நீர் நடுவே உள்ள வடிகால் வாய்க்காலில் செல்லும் போது, வடிகால் வாய்க்காலினைத் தேக்கியும் பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. சில இடங்களில் டீசல் என்ஜின் மூலம் வடிகால் வாய்க்காலில் இருந்து தண்ணீர் இறைத்து, பாசனத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறாகக் கசிவு நீர் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## நீர்ப்பயன்படுத்துவோர் சங்கம் அமைப்பு

தூசி ஏரிப் பகுதியிலுள்ள 18 கிராமங்களில் வசிக்கும், 18,358 பேர்களில் பெரும் பகுதியினர் விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இப்பாசனப் பகுதிக்கு தூசிமாமண்டூர் ஏரி மூலம் மட்டும்தான் தண்ணீர்ப் பாசனம் கிடைக்கின்றது. 18 கிராமங்களிலும் உள்ள விவசாயிகள் நூற்றுக்கணக்கில் ஒன்று சேர்ந்து மழை பெய்யும் போது பாலாற்றில் ராஜாக்கால் கால்வாய் பிரியும் இடத்தில் தற்காலிகத் தடுப்பு

ஏற்படுத்திக் கால்வாயைச் சுத்தம் செய்து வருவது வழக்கம். இவ்வளவு முயற்சிகள் மேற்கொண்டும் நீர் வரத்து போதுமானதாக இருக்கவில்லை.

1953 முதல் 1976 வரையிலான 23 ஆண்டுகளில், 6 ஆண்டுகளில் மட்டும் ஏரி நிரம்பியது. இந்த 23 ஆண்டுகளில் 8 ஆண்டுகளில் நீர் மட்டம் 6 மீட்டருக்கும் குறைவாகவே இருந்திருக்கிறது (உயர் நீர் மட்டம் 9.3 மீட்டர்).

இச்சூழ்நிலையில் செய்யாறு ஆற்றில் தண்டரையில் ஒரு அணைகட்டி பக்கத்து கிராமத்திலுள்ள உத்தரமேரூர் ஏரிக்குத்தண்ணீர் அளிக்க அரசு முயற்சி மேற்கொண்டது. நீர்ப்பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த தூசிமாமண்டூர் ஏரி பாசனப் பகுதி விவசாயிகள், தண்டரை அணைக்கட்டு மூலம் நேரடியாகத் தண்ணீர் வந்தால் தங்களின் குறை தீரும் என்று எண்ணினர். இந்த எண்ணத்தை ஒரு கோரிக்கையாக தூசிமாமண்டூர் ஏரி நிர்வாகப் பொறுப்பை ஏற்று வந்த நீர்ப்பாசனக் கமிட்டியிடம் எடுத்துச் சொல்லி அரசை வற்புறுத்த வேண்டினர். அரசு இந்த யோசனையை ஏற்பதில் தயக்கம் காட்டியது.

நீர்ப்பாசனக் கமிட்டி அரசிடம் இதனை வலியுறுத்திச் சொல்லத் தயக்கம் காட்டியது. அதற்குக் காரணம், இக்கமிட்டி ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களால் ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் ஆட்சியிலிருந்த கட்சியுடன் தொடர்புடையவர்கள் ஆதலால், அவர்கள் அரசின் செயலை எதிர்த்துக்குரல் கொடுக்க முடியாத, வற்புறுத்திச் சொல்ல முடியாத சூழ்நிலையில் இருந்தனர். பாதிக்கப்பட்ட பாசனதாரர்கள், குறிப்பாகத் தூசி மாமண்டூர், பல்லாவரம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு எதிராக நேரடி நடவடிக்கையில் இறங்கினர். கடை அடைப்பு, சாலை மறியல் ஆகியவைகளை மேற்கொண்டனர்.

இவர்களில் செல்வாக்கு படைத்த சிலர் தலைநகர் சென்னையில் உள்ள முக்கிய அரசு அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு இக்கோரிக்கையை (தண்டரையிலிருந்து நேரடி கால்வாய் மூலம் தூசிமாமண்டூர் ஏரிக்கு நீர் கொண்டு வருவது) வலியுறுத்தி வந்தனர். இவை யாவும் 1976-77 வாக்கில் நடைபெற்றன. பல கோணங்களில் தங்களுடைய

கோரிக்கையை வலியுறுத்தி, தூசிமாமண்டூர் பாசனப்பகுதி விவசாயிகள் ஓரளவு மன நிறைவு பெறும் வகையில் தண்டரை அணைக்கட்டிலிருந்து எடுக்கப்படும் கால்வாயைத் தொடர் ஏரிகளுக்குப் பிறகு கிராமத்திற்கு அருகாமையில் உள்ள சித்தாத்தூர் ஏரியில் இணைப்பது என்றும் அதன் மிகுதி நீர் தூசிமாமண்டூர் ஏரிக்குக் கிடைக்கச் செய்வது என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. கால்வாயும் வெட்டி முடிக்கப்பட்டது. ஆனால் 20 ஆண்டுகளாகியும் இதுவரை சிறிது நீர் கூட சித்தாத்தூர் ஏரியிலிருந்து தூசிக்கு வந்துசேரவில்லை.

ஓரளவு வெற்றிகண்ட சூழ்நிலையில் பாசனக் கமிட்டி தங்களுக்குச் சாதகமாகச் செயல்படாத நிலையில் பாசனதாரர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் ஏரிக்கு நீர் கொண்டு வந்து சேர்க்கவும் கிடைக்கும் நீரைச் சீராகப் பங்கிட்டுக் கொள்ளவும் முடியும் என்ற எண்ணம் வலுப்பெற்றது.

மேனல்லூர் கண்ணப்ப முதலியாரும், திரு. வேதாந்தம் அவர்களும் சங்கம் அமைக்கும் பணியில் தீவிர பங்கேற்றனர். பாசனப் பகுதியில் உள்ள ஒவ்வொரு கிராம முக்கியமானவர்களையும், கண்ணப்ப முதலியார், வேதாந்தம் மற்றும் சிலரும் நேரடியாகச் சந்தித்து, எல்லாப் பாசனதாரர்களும், ஒன்று கூட வேண்டிய சூழ்நிலையை விளக்கிச் சொன்னார்கள். சங்கமாக செயல்படுவதால் கிடைக்கக்கூடிய பயன்களைக் கூறினார்கள். முக்கியமானவர்கள் சுமார் 6 மாத காலம் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டனர் கூட்டம் போடுவதற்கும் வெளிப்பயணம் மேற்கொள்ளவும் சிலர் தங்கள் பணத்தைச் செலவிட்டனர். இந்தப் பாசன சபையில் ஒவ்வொரு கிராமத்தைச் சேர்ந்தவருக்கும் பங்குண்டு என்பதை வலியுறுத்தினர். 2 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்த முயற்சியின் பயனாக, தூசி மாமண்டூர் இசா நீர்ப்பாசன விவசாயிகள் சங்கம் (இசா. என்பது பெரிய ஏரி எனப் பொருள்படும்) உருவானது.

இந்தச் சங்கம் 1980 ம் ஆண்டு தூசி கிராமத்தைத் தலைமையகமாகக் கொண்டு பதிவு செய்யப்பட்டது. பதிவு எண் 9/80 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 1 ரூபாய் சந்தாவாகச் செலுத்தினர்

இந்தச் சங்கம் நேரடியாகப் பாசன நிர்வாகத்தை மேற்கொள்ளத் துவங்கியது. அரசினால் அமைக்கப்பட்ட பாசனக் கமிட்டி இந்தச் சங்கம் செயல்படுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. இது செயல்படாமல் இருக்க, எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்ளத் துவங்கியது. ஆகவே, இச்சங்கம் உரிய முறையில் செயல்படுவதற்கு நீதி மன்றத்தை அணுக வேண்டிய சூழ்நிலை உருவானது. இவர்கள் நீதிமன்றத்திற்கும் சென்று தங்களுடைய நிலையை உறுதிப் படுத்தினர்.

இதைத் தொடர்ந்து அரசு பாசனக் கமிட்டியைக் கலைத்துவிட்டது. சங்கம், கலைக்கப்பட்ட பாசனக் கமிட்டியின் தலைவரை, அவருடைய விருப்பத்தின் பேரில் சங்கத்தில் சேர்த்துக் கொண்டது. அவருக்காக ஒரு துணைத் தலைவர் பதவியைப் பொதுக் குழு ஏற்படுத்தித் துணைத் தலைவராகவும் ஏற்றுக் கொண்டது. கண்ணப்ப முதலியார் தலைவராகத் தொடர்ந்து சில ஆண்டுகள் இருந்து சங்கத்தை வலுப்பெறச் செய்தார்.

**சங்க நோக்கங்கள்** இந்தச் சங்கத்தின் முக்கிய நோக்கங்கள், ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வருதல், கிடைக்கும் நீரை எல்லோருக்கும் நிறைவு தரும் வகையில் பகிர்ந்து கொள்ளுதல், தங்களுக்குள் எழும் பிணக்குகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளுதல், அரசு நிர்வாகத்துடன் சங்கம் மட்டும் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்ளுதல், மதகுகளின் செயல்பாட்டை தாங்களே ஏற்றுக் கொள்ளுதல் என்பனவாம்.

**உறுப்பினர்கள்** ஒவ்வொரு கிராமமும், தங்களின் பாசன நிலப்பரப்பை ஒட்டிச் சங்கத்தில் பங்கேற்கும். உதாரணமாக, பெரிய கிராமமான அதிக நிலப்பரப்பைக் கொண்ட மாமண்டூருக்கு **5** உறுப்பினர், குறைந்த பாசனப் பரப்பு கொண்ட மன்னூருக்கு **1** உறுப்பினர் தான். இந்தச் சங்கத்திற்கு நேரடியான உறுப்பினர்களைத் தவிர கிராம பஞ்சாயத்துத் தலைவர்களும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தொழில் நுட்ப அடிப்படையில் ஆலோசனை கூறுவதற்காகப் பணி ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உதவியாளர் ஒருவரும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்.

| | |
|---|---|
| தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் | 42 |
| தொழில் நுட்ப உறுப்பினர் | 1 |
| கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் | 19 |
| மொத்தம் | 62 |

செயற்குழு இந்த 62 உறுப்பினர்கள், தங்களுக்குள் ஒரு தலைவர், 4 துணைத் தலைவர்கள், ஒரு செயலாளர், 4 இணைச் செயலாளர்கள், ஒரு பொருளாளர் என்று தேர்ந்தெடுத்துக் கொள்வர். இவர்களைக் கொண்டதே செயற்குழு

## சங்கப் பணிகள்

சங்கத்தின் பணிகள் முக்கியமாக 3 வகைப்படும்:

அ. தண்ணீர் இருப்பைப் பொறுத்துத் திட்டமிடல்,

ஆ. அவ்வப்போது பாசன மதகுகளைத் திறந்து விட பொதுப் பணித் துறையிடம் தொடர்பு கொள்ளுதல்.

இ. நீர் பாசனத்தில் ஏற்படும் சிறு சச்சரவுகளைத் தீர்த்து வைத்தல்.

வாய்க்கால் பராமரிப்புப் பணியை அந்தந்த கிராமத்துக்காரர்களே ஒன்றாக சேர்ந்து மேற்கொள்கின்றனர். இதில் சங்கம் தலையிடுவது இல்லை. இதைப் போன்று வருகின்ற நீரை பாய்ச்சுவதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் கொண்டங்கட்டி (நீர்கட்டி) ஊதியமும் பாசனதாரர்களிடம் இருந்தே நேரடியாக வசூல் செய்யப்படுகிறது. இதை அந்த நீர்கட்டிகளே வசூலித்துக் கொள்கின்றனர். இதிலும் சங்கம் தலையிடுவது இல்லை.

பொதுப்பணித்துறை பணி ஆய்வாளர் இராசாக் கால்வாய்க்கால் பராமரிப்பையும் தலை மதகு செயல்பாட்டையும் கவனித்துக்கொள்கிறார். அவரே தூசிமாமந்தூர் ஏரியின் 4 மதகுகளையும் இயக்குகிறார். ஏரிக்கரை மற்றும் நீர்வரத்துதுவாய்க்கால் பராமரிப்பும் இவர் பணியாகும். பாசனச்

சங்க பொருப்பாளர்களின் வேண்டுகோளின்படி இவர் மதகுகளை செயல்படுத்துகிறார்.

## நீர் ஆதாரமும் - பயிர்திட்டமும்

தென்மேற்குப் பருவம், வடகிழக்குப் பருவம் ஆகிய இரண்டு பருவங்களிலும் மழைநீர் ஏரிக்கு கிடைக்கிறது என்றாலும் வடகிழக்குப் பருவ மழை மூலம் கிடைக்கும் மழை தான் பாசனத்திற்கப் பெரிதும் உபயோகிக்கப்படுகிறது. சென்ற 12 வருடங்களில் 1985, 1991 ஆண்டுகளில் தான் சுமார் 30 அடி நீர் ஏரியில் நிரம்பியிருந்திருக்கிறது. மற்ற எல்லா ஆண்டுகளிலும் 20 அடிக்குக் குறைவாகவே தண்ணீர் இருந்திருக்கிறது. சென்ற 20 ஆண்டுகளாக ராஜாக்கால் கால்வாய் மூலமும் மற்ற கால்வாய்கள் மூலமும் தண்ணீர் வருவது மிகவும் குறைந்து விட்டதே இதற்குக் காரணம். குறைந்த நீர்வரத்திற்கு முக்கியகாரணம் பாலாற்றிலிருந்தும் செய்யாற்றிலிருந்தும் வரும் கால்வாய்கள் மூலம் நீர்வரத்து மிகக் குறைந்ததேயாகும். தண்டரை திட்டம் தூசி ஏரிக்குத் தண்ணீர் அளிப்பதில் பெரும் ஏமாற்றம். தண்டரை கால்வாய் வெட்டப்பட்டது முதல் ஒரு துளி தண்ணீர் கூட தூசி ஏரிக்கு வந்து சேரவில்லை இருந்தும் அரசு தண்டரை திட்டச் செயற்பாட்டிற்காக ஏக்கருக்கு ரூ 50 வீதம் சென்ற 12 ஆண்டுகளுக்கு மேம்பாட்டுத் தீர்வை விதித்துள்ளது.

ஏரிப் பாசனத்தைக் கொண்டு நெற்பயிர் மட்டும் சாகுபடி செய்யப்படுகிறது என்றாலும், தண்ணீர்ப் பற்றாக்குறைக் காலங்களில், குறிப்பாக மேட்டு மதகுப் பாசனப் பகுதியில் நெல்லுக்குப் போதிய நீர் இல்லாவிட்டால் கடலைப் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. சம்பா, நவரை ஆகிய இரண்டு பட்டங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இருபோக சாகுபடி நிலங்களில் சம்பாவும், நவரையும் பயிர் செய்யப்படுகின்றன. ஒரு போகமாக இருந்தால் நவரை மட்டும் அல்லது சம்பா மட்டும் சாகுபடியாகிறது.

கடலை மார்கழியில் விதைக்கப்பட்டுப், பங்குனியில் அறுவடை செய்யப்படுகிறது. இது குறிப்பாக, தூசிமாமண்டூர் மேட்டுக் கால்வாய்ப் பகுதியில் பரவலாகப் பயிர் செய்யப்படுகிறது. இதைப் போன்று, போதுமான

நீர் கிடைக்காத வாய்க்காலின் கடை மடைப் பகுதிகளிலும், கடலை, எள் சாகுபடி செய்யப்படுகின்றன.

தூசிமாமண்டூர் மேட்டு வாய்க்கால், பகுதிகளிலும் பள்ள வாய்க்கால் கடை மடைப் பகுதிகளிலும் தண்ணீர் கிடைப்பது நிச்சயமற்றதாகியதன் காரணத்தால் நிலத்தடி நீரை உபயோகிக்கும் வகையில் கிணறுகள் அதிகமாகத் தோண்டப்பட்டுள்ளன. ஏரி பாசனத்தோடு கிணத்து நீரும் பயன்படுத்தப்படுகிறது. சில உழவர்கள் குறிப்பாக, செய்யாறு, காஞ்சிபுரம் சாலையின் அருகாமையில் உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கறிகாய்ப்பயிர்களும் பயிரிட்டு உள்ளனர். இந்தக் கறிகாய்கள் 10 கி.மீ. தொலைவில் உள்ள காஞ்சிபுரத்திற்குத் தினமும் அனுப்பப்படுகின்றன..

ஏரி நீர்ப் பங்கீடு ஒவ்வொரு மாதமும் பொதுக்குழு உறுப்பினர்கள் கூடித் தண்ணீர் நிலைமையை அனுசரித்து, தண்ணீர் பங்கீட்டை மேற்கொள்கின்றனர். ஆண்டு ஆரம்பத்தில், குறிப்பாக நவம்பர் மாதத்தில் (ஐப்பசி) ஏரியில் சேர்ந்து இருக்கும் நீரைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பயிர்த் திட்டத்தை வகுத்துக் கொள்கின்றனர். தண்ணீர் தேங்கி நிற்கும் அளவை கருத்தில் கொண்டு பயிர்த் திட்டம் உருவாக்கப்படுகிறது. இதற்கென சங்கம் ஒரு வரையறை வைத்திருக்கிறது.

* நீர் மட்டம் ஏரியில் 8 அடிக்குக் குறைவாக இருந்தால் தூசி நத்தக்கொல்லை, மாமண்டூர், இரண்டு கிராமங்களுக்கும் ஒரு போக நெல் சாகுபடிக்கத் தண்ணீர் வழங்கப்படும்.
* 14 அடிக்குத் தண்ணீர் தேங்கினால், இந்த இரு கிராமங்களுக்கும் இரு போக நெல் சாகுபடிக்கும் மாமண்டூருக்கு ஒரு போக சாகுபடிக்கும் பாசனம் அளிக்கப்படும்.
* நீர் மட்டம் 20 அடியாக இருந்தால், மேற்குறிப்பிட்ட கிராமங்களுடன் குரங்கனில் முட்டம் கிராமத்திற்கும் இரு போக சாகுபடிக்குத் தண்ணீர் வழங்கப்படும்.
* 24 அடி நீர்மட்டம் இருந்தால் மேற்கண்ட கிராமங்களுடன் பல்லாவரத்திற்கும் இருபோக சாகுபடிக்கும் மற்ற

கிராமங்களுக்கு ஒரு போக சாகுபடிக்கும் பாசனம் அளிக்கப்படும்.

* நீர் மட்டம் உச்சநிலையை (30 அடி) எட்டினால் எல்லாக் கிராமங்களுக்கும் இரு போக சாகுபடிக்கு நீர் கிடைக்கும்.

இந்தப் பயிர்த் திட்டம் எல்லாக் கிராமங்களையும் கலந்து ஆலோசித்தும் பல ஆண்டுகள் அனுபவத்தை வைத்து வரையறுக்கப்பட்டது. இந்தக் கோட்பாடுகளைப் பாசனதாரர்கள் மதித்து நடக்கிறார்கள்.

தமிழ்நாடு சட்ட திட்டங்களின் படி வாய்க்கால் தகராறுகளை வருவாய்த் துறை அலுவலர்கள் தீர்த்து வைக்க வேண்டும். ஆனால், செயல்முறையில் சங்கமே இந்தப் பாசனப் பகுதியில் எழும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்கிறது.

தண்ணீர் போதுமான அளவு சேர்ந்ததும் சங்கம், தண்டோரா (டாம்டாம்) மூலம் அறிவிப்பு செய்து குறிப்பிட்ட நாளில், நேரத்தில், தூசி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் கூடுகிறது. சாதாரணமாக, ஞாயிற்றுக்கிழமைகளில் தான் கூட்டப்படுவது வழக்கம். இந்தக் கூட்டத்தில் எந்தெந்தக் கிராமத்துக்குத் தண்ணீர் அளிப்பது, எந்த அளவு மதகுகளைத் திறப்பது, திறக்கப்பட வேண்டிய தேதி ஆகியவைகளை முடிவு செய்வார்கள். எந்த மதகுகள், எந்த அளவிற்குத் திறக்கப்பட வேண்டும் என்பதைப் பொதுப் பணித் துறைப் பிரிவு அலுவலர்க்கு எழுத்து மூலம் தெரிவிப்பார்கள். இதன்பேரில் பிரிவு அலுவலர் பாசன உதவியாளர் மூலம் மதகுகளைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்.

முதலில் இரண்டு மேட்டு வாய்க்கால்கள் மட்டும் திறக்கப்படும். இந்த வாய்க்காலில் நீர் மிகவும் குறைந்த நிலையில்தான் தாழ்வு (பள்ள) மதகுகள் திறக்கப்படும். இப்போதும் இம்முறை பின்பற்றப்பட்டு வருகிறது. சாகுபடித் தேவையை அனுசரித்து மதகுகளின் பலகையை இறக்கவோ, ஏற்றவோ, அவ்வப்போது சங்கம், பிரிவு அலுவலருக்குத் தெரியப்படுத்தும். ஒரு முறை திறந்தால் மறு கோரிக்கை வரும் வரையில் அதே அளவில் தான் மதகுப் பலகைகள் இருக்கும்.

இரவு நேரங்களிலும் நீர்ப்பாசனம் உண்டு. பாசனப் பருவத்தில் ஒரே நாளில் ஒரு அங்குல மழை பெய்தால், பொதுப்பணித்துறை சங்கத்தின் வேண்டுகோள் இன்றியே பாசன மதகுகளை மூடிவிடும். மீண்டும் தண்ணீர் தேவைக்கான கோரிக்கை சங்கத்தில் இருந்துவரும்போதுதான் மதகுகள் திறக்கப்படும். இந்தச் செயல்பாடு பாசனதாரர்களுக்கு நிறைவு அளிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

பாசன காலத்தில் ஏதேனும் ஒரு கிராமத்தில் தண்ணீர் வரத்து போதுமானதாக இல்லாதிருந்தால், மதகுப் பலகைகளைக் குறிப்பிட்ட அளவு உயர்த்தச் சங்கப் பொறுப்பாளர்களை, தேவைப்படும் கிராம மக்கள் தங்கள் கிராம உறுப்பினர் மூலம் கேட்டுக் கொள்வார்கள். அதன் பேரில் சங்கப் பொறுப்பாளர்களில் ஒருவர் பொதுப்பணித்துறைக்குக் கடிதம் மூலம் தெரிவிப்பார். வழக்கமாகப் பொறுப்பாளர்கள் சார்பாகச் சங்கப் பொருளாளர் வேதாந்தம் அவர்கள்தான் இந்தப் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

தண்ணீர் திறந்து விடுவதில் சங்கத்திற்கும், பொதுப் பணித்துறைக்கும், பாசனதாரர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இது மிகவும் விரும்பத்தக்க அளவிலேயே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## பாசனப்பகிர்வு

நான்கு மதகுகளில் இருந்தும் தண்ணீர் பகிர்வுத் தொட்டியில் விழுந்து கிளை வாய்க்கால்கள் மூலம் பாசனத்திற்குச் செல்கிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் எந்த வாய்க்கால் மூலம் தண்ணீர் எடுத்துக் கொள்வது என்பதும், எவ்வளவு நேரம் நீரைத் தேக்கிப் பாய்ச்சிக் கொள்ளலாம் என்ற விதிமுறைகளும், கோட்பாடுகளும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கான வரையறைகள் யாவும் வாய்மொழியாய் வந்தவையே அன்றி எந்த ஒரு எழுத்து மூல குறிப்பு கிடையாது.

ஒவ்வொரு பகுதிக்கும் பாசனம் தருவதற்குப் பகிர்வு அமைப்புகள் வாய்க்காலில் கட்டப்பட்டுள்ளன. அவை மூலம் பாசனப் பகுதியை ஒட்டிப் பகிர்வு அமைப்பின் அகலம் நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாறு அமைக்கப்பட்ட பகிர்வு அமைப்புகள் வைக்கப்பட்டிருக்கும் இடம், சில இடங்களில் தவறாகக்

கணிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, மாமண்டூர் தாழ்வு (பள்ள) மதகின் மூன்றாவது வாய்க்காலின் மன்னூர் கிராமத்திற்கான பிரிவு அமைப்பு, வாய்க்காலின் வளைவுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. வளைவுப் பகுதியில் அமைக்கப்பட்டிருப்பதால், வளைவின் வெளிப்புறப் பகுதியில் வண்டல் சேர்ந்து வாய்க்கால் மேடாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதனால் வளைவின் வெளிப்புறமாக இருக்கும் பிரிவில் நீரின் போக்கு குறைந்தும் உள்புற பிரிவில் அதிகமாகச் செல்லவும் வாய்ப்பு இருக்கிறது. பன்னாட்டுப் பாசன மேலாண்மை நிறுவன நிபுணர்கள் பார்வையிட்ட போது இந்தக் குறைபாட்டினைக் காண முடிந்தது.

சென்ற 1991ஆம் ஆண்டு முதல் உலக வங்கியின் ஏரிகள் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மேம்பாட்டுப் பணிகள் நடந்து வருகின்றன. இதற்கென 134 லட்ச ரூபாய் அங்கீகரிக்கப்பட்டுள்ளது வாய்க்கால்கள் ஏரியிலிருந்து, காஞ்சிபுரம் - செய்யாறு நெடுஞ்சாலை வரை சுமார் 1.5 கி.மீ தொலைவிற்கு கான்கிரீட் தளம் அமைத்துச் சீர் செய்யப்பட்டுள்ளது. கால்வாய்க் கரையில் இருந்து நெடுஞ்சாலை வரை உள்ள நிலங்களுக்கு, ஏரியிலிருந்து வரும் கசிவு நீர் மூலமே பாசனத்திற்குத் தேவையான தண்ணீர் கிடைத்து விடுகிறது. இதிலுள்ள மேட்டுப் பகுதிகளுக்கும், நெடுஞ்சாலைக்குக் கிழக்கே உள்ள பகுதிகளுக்கும் ஏரி மதகு திறந்தால்தான் பாசனம் செய்ய முடியும்.

சீரமைப்பு மூலம் நெடுஞ்சாலை வரை கான்கிரீட் தளம் அமைத்து வாய்க்கால் சீரமைக்கப்பட்டிருப்பதால், பாசனநீர் எந்தவிதத் தடங்கலும் இன்றி, மத்திய, கடைமடைப் பகுதிகளுக்குச் செல்கிறது. இந்தத் தலைமடைப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு நீர்ப்பாசனம் ஒரு பிரச்சினையாக இல்லாததால் (கசிவு நீரே போதுமானது) இவர்கள் தாங்களாகவே தேவைப்படும் போது தண்ணீர் கட்டிக் கொள்கின்றனர்.

மேலும், வாய்க்காலில் 7-8 கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய நீர், தலைமடையில் செல்வதால் வாய்க்காலைத் தேக்கி வயலுக்கு திருப்பிவிட்டால் ஒரு சில நிமிடங்களிலேயே பாய்ந்து விடுகிறது. இந்தச் சிறிது நேரத் தடங்கலைக் கீழ்ப்பகுதியில் உள்ள விவசாயிகள் உணர்வதற்கு

முன்பாகவே, நீர்ப்பாசனம் முடிந்து விடுகிறது. நாங்கள் எடுத்த கணக்கின்படி ஏரியின் மூன்றாவது மதகின் மூன்றாவது மடையில் வரும் நீர் அளவு மட்டும் வினாடிக்கு 3.4 கன அடி. வரும் தண்ணீர் முழுவதையும் திருப்பிவிடும் போது ஒரு ஏக்கரில் 1 அங்குல அளவிற்கு தண்ணீர் கட்டுவதற்கு இருபது நிமிடங்களுக்கு உள்ளாகவே தேவைப்படும்.

தலைமடைப் பகுதியில் மாமண்டூர், தூசி பள்ள வாய்க்கால் பாசனக்காரர்கள் தவிர மற்ற எல்லாக் கிராமத்து விவசாயிகளும் தங்களின் பாசனப் பரப்பை ஒட்டிக் கொண்டங்கட்டிகளை வைத்து நீர்ப்பாய்ச்சுகிறார்கள். இவர்களின் எண்ணிக்கை பாசனப் பரப்பைப் பொருத்து மாறுபடும். கொண்டம் என்பது வாய்க்காலின் குறுக்கே எழுப்பப்படும் தற்காலிகத் தேக்கம். மேட்டுப் பகுதிக்கு இவ்வாறு கொண்டம் அமைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருப்பதால் இப்பணியில் ஈடுபட்டிருக்கின்றவர்களைக் கொண்டங்கட்டி என அழைக்கிறார்கள்.

## வடகல்பாக்கத்தில் பாசன நிர்வாகம்

எவ்வாறு தண்ணீர் பகிர்ந்தளிக்கப்படுகிறது, ஒவ்வொரு வயலுக்கும் பாய்ச்சப்படுகிறது என்பவற்றைத் தெரிந்து கொள்வதற்காக வடகல்பாக்கம் கிராமத்தில் பாசன முறையை விரிவாகக் கண்ணுற்றோம். 4வது மதகான மாமண்டூர் மேட்டு மதகு மூலம் பாசனம் பெறும் பகுதிக்குச் சென்ற பல ஆண்டுகளாகத் தண்ணீர் வருவதே இல்லை. மாமண்டூர் பள்ள மதகு மூலம்தான் தண்ணீர்ப் பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. இதிலும் பல இடங்களில் வாய்க்காலின் நீரோட்டத்திற்கு மேலாகவே நிலப்பகுதி அமைந்திருக்கிறது. வாய்க்கால் நீரைக் கொண்டம் கட்டி, தேக்கினால் தான் இந்தப் பகுதிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியும், மூன்று பணியாளர்கள் நீரைப் பாய்ச்சுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் நீரைக் கொண்டம் கட்டி தேக்கிப் பாய்ச்சுவதிலும், மற்றொருவர் அதே நேரத்தில் வாய்க்காலின் மேல் பகுதியில் தண்ணீர் தேக்கப்படாமல் இருக்கிறதா என கண்காணிப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்றொருவர் கொண்டம் கட்டாமலேயே நீர் பாயக்கூடிய தாழ்வான பகுதியில் பாசனம் செய்யும் பணியை மேற்கொள்கிறார். இவரை நீர்கட்டி என அழைக்கிறார்கள்.

மாமண்டூர் பள்ள மதகில் இருந்து வரும் பாசன நீர் நான்கு வாய்க்கால்களாகப் பிரிகிறது. மாமண்டூர், வடகல்பாக்கம், மன்னூர், பூநெய்த்தாங்கல் முதலிய கிராமங்களுக்கும் இந்த மூன்றாவது மடை வாய்க்கால் மூலம் தான் நீர்ப் பாசனம் கிடைக்கிறது. இந்த வாய்க்கால் வடகல்பாக்கம் பாசனத் தலைப்பை எட்டுவதற்கு முன்பு நான்கு கிளை வாய்க்கால்கள் பிரிகின்றன. 5வது கிளைவாய்க்கால் முக்கிய வாய்க்காலின் வடக்குப் புறத்திற்கும் 6வது கிளை வாய்க்கால் கிழக்குப் பகுதிக்கும் பாசனம் அளிக்கின்றன. இதுபோக முக்கிய வாய்க்காலின் 3 இடங்களில் கொண்டம் கட்டி பாசனம் மேற்கொள்ளப்படுகிறது.

கொண்டம் கட்டுவதற்கு ஒவ்வொரு கிராமத்திற்கும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றாவது பிரிவு வாய்க்கால் வடகல்பாக்கம் எல்லையில் காலை 5 மணி முதல் மதியம் 12 வரை கொண்டம் கட்டிநீர்ப்பாய்ச்ச வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நேரம் முடிந்தவுடன் கீழ்ப்பகுதி பாசனதாரர்கள் இந்தக் கொண்டத்தை எடுத்து விட்டு, தங்கள் பகுதிக்கு நீர் எடுத்துச் செல்வார்கள். ஒவ்வொரு முறையும் தடுப்பு அணை எடுப்பதற்குப் பதிலாக மூன்று இடங்களில் தடுப்பு அணைகள் சுமார் 3 அடி உயரத்திற்கு எழுப்பி உள்ளனர். நடுவில் மட்டும் ஒரு அடி அகலத்திற்குத் தற்காலிகத் தடுப்பு அமைக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் கொண்டங்கட்டுவதற்கு இந்த ஒரு அடி அகல இடைவெளியை அடைத்தால் மட்டுமே போதுமானதாகும். இதே போன்று வாய்க்காலின் இடப்புறமாக (வடக்கே) பிரியும் வாய்க்காலில் காலை 6 முதல் மாலை 6 மணி வரை தேக்கிப் பாய்ச்சுவதற்கும் இக்கிராமப் பாசனதாரர்களுக்கு உரிமை உண்டு.

முறைப் பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காகப் பாசனப் பகுதியை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு நாள் நீர் கொடுத்து மீண்டும் நான்காம் நாள் முதல் பகுதிக்கு நீர் வழங்கப்படுகிறது. இதற்கு வசதியாக மூன்று இடத்தில் தடுப்பு அணைகள் உள்ளன. நீர்பாய்ச்சும் போது, ஒரு பக்கமாக இருந்து கடைசிவரை தண்ணீர் வழங்கப்படுகிறது. இதன் ஒவ்வொரு வயலுக்கும் நேரடியாக நீர்பாய்ச்சாமல் மூன்று நான்கு வயல்களுக்குத் தத்துமடை அமைத்து நீர்பாய்ச்சப்படுகிறது.

இதன் மூலம் முதல் வயலில் பாய்ந்து முடிந்ததும், நீரானது சுமார் 5 செ.மீ உயரத்தில் உள்ள தத்து மடை வழியாக வழிந்து அடுத்த வயலுக்குச் செல்கிறது. முதல் பகுதியில் ஆரம்பித்து இறுதிப் பகுதி வரை எல்லா வயல்களுக்கும் இந்த 7 மணி நேரத்தில் நீர்பாய்ச்சப்படுகிறது.

இவ்வாறு முறைவைத்துப் பாய்ச்சப்படுவதால் எல்லா வயல்களுக்கும் சீராகத் தண்ணீர் கிடைக்கிறது. கடை மடை, தலைமடை என்ற வேறுபாடு இல்லாமல் எல்லா வயல்களும் ஒரே அளவு தண்ணீர் பெறுகின்றன. ஏரியில் நீரின் உயரம் குறைந்து நீர் அழுத்தக் குறைவினால் நீர் வரத்து குறையும்போது நீர்க்கட்டி அந்தக் கிராமத்தில் உள்ள சங்க உறுப்பினரிடம் சொல்லிப் பாசன மதகுப் பலகையை உயர்த்தித் தரச் சொல்லி வேண்டுகோள் விடுப்பார். உறுப்பினர் உடனே சங்கப் பொறுப்பாளரிடம் சொல்லிப் பொதுப்பணித்துறை அலுவலர்களுக்குத் தெரியப்படுத்தி, மதகுப் பலகை உயர்த்தப்படும்.

ஏரியில் இருக்கும் நீர் அளவு குறையும் போது முறைப் பாசனம் மேற்கொள்ளப்படுகிறது. ஏரி நிரம்பி வழியும் சமயத்தில், நீர் எல்லாக் கிராமங்களுக்கும் செல்ல வேண்டியிருப்பதால், வாய்க்காலில் வரும் நீரின் வேகம் அதிகமாக இருக்கும். இந்த ஆண்டு (1994 - 95) நீர்ப்பற்றாக்குறை இருந்ததால் ஏரியில் கொள்ளளவு குறைவாகவே இருந்தது. (மிகுந்து காணப்பட்ட ஆழம் 18 அடி)- இதனால், தூசி, தூசிநத்தக்கொல்லை, மாமண்டூர், மன்னூர், குரங்கனில்முட்டம், வடகல்பாக்கம் ஆகிய 6 கிராமங்களுக்கு மட்டும் பாசனத்திற்கு நீர் விடப்பட்டது.

கொண்டம் கட்டிகளுக்கு ஒவ்வொரு சாகுபடியாளரும் அறுவடை சமயத்தில் காணி (1.33 ஏக்கர்) க்கு 4 மரக்கால் (ஏக்கருக்கு 14 கிலோ) நெல் கூலியாகத் தரவேண்டும். மொத்தமாக நெல் வசூல் செய்து மூன்று கொண்டம் கட்டிகளும் தங்களுக்குள் சமமாகப் பங்கிட்டுக் கொள்கின்றனர். இந்தக் கொண்டம் கட்டிகள் நீர் பாய்ச்சும் வேலையுடன் ஊர்ப் பொது வேலைகளிலும் பங்கேற்கின்றனர். திருவிழா சமயங்களில் ஊர் சுத்தம் செய்வது மற்ற விழா நாட்களில் வீடுகளுக்குப் பந்தல் போடுவது போன்ற பணிகளையும் மேற்கொள்வார்கள். இத்தகைய பணிகளுக்காக

ஊர்க்காரர்கள் பொங்கல் சமயத்தில் வேட்டி, துண்டு பிற அன்பளிப்புகள் வழங்குவார்கள். பணமும் கொடுப்பதுண்டு. இது அவரவர்களின் விருப்பத்தைப் பொருத்தது.

## நிலத்தடி நீர் உபயோகம்

சென்ற 10 ஆண்டுகளில் ஏரியின் நீர் 1985, 1991 ஆகிய இரு ஆண்டுகளில் தான் 30 அடி அளவை எட்டியது. அந்த இரு ஆண்டுகளில் மட்டுமே மேட்டு வாய்கால்கள் திறக்கப்பட்டு எல்லாக் கிராமங்களுக்கும் தண்ணீர் கொடுக்கப்பட்டது. மற்ற 8 ஆண்டுகளில் புற வாய்க்கால்கள் (மேட்டு வாய்க்கால்) வழியாகத் தண்ணீர் பாய்ச்சும் அளவிற்கு நீர் மட்டம் உயரவில்லை. பல ஆண்டுகளாக இந்தப் பகுதிகளுக்கு நீர் செல்லாத காரணத்தால் இந்தப் பகுதிகளில் கிணறு வெட்டி தோட்டப் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு கிணற்று நீரை உபயோகித்து சாகுபடி செய்பவர்கள் கடலைப் பயிர் ஒன்றை மட்டுமே முக்கியமாகப் பயிரிடுகின்றனர். மூன்று போகமும் கடலையே பயிர் செய்பவர்களும் உண்டு. ஏரிப்பாசனம் பகுதியில் மோட்டார் பொருத்தப்பட்ட 421 கிணறுகளும் 142 சாதா கிணறுகளும் உள்ளன. வடகல் பாக்கத்தில் 19 மின் இணைப்பு கொண்ட கிணறுகளும் சாதா கிணறுகளும் உள்ளன.

## சங்க நிதி ஆதாரம்

சங்கத்திற்கென்று உறுப்பினர் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூபாய் 1/- வீதம் எல்லாக் கிராமத்தவரும் ஒவ்வொரு ஆண்டும் உறுப்பினர் தொகையைச் செலுத்தவேண்டும். வாத்து மேய்வதற்காக நிலத்தைக் குத்தகைக்கு விட்டு, அந்தக் குத்தகைப் பணத்தைச் சங்கத்திற்கு ஒப்படைப்பார். சென்ற பல ஆண்டுகளாக நீர் வரத்து மிகவும் குறைந்து விட்டதால், வாத்து மேய்ச்சலுக்காக வரும் குத்தகைப் பணமும் குறைந்துவிட்டது. உறுப்பினர் யாரும் நேரடியாக உறுப்பினர் தொகையைச் செலுத்துவதும் இல்லை. கடந்த 3 ஆண்டுகளில் சங்கத்தின் மூலம் செலவு ஏதும் செய்யப்படவில்லை. இறுதி இருப்பு ரூ. 44/- அப்படியே இருக்கிறது. கடிதப் போக்குவரத்திற்கான செலவு போன்ற சில்லறைச் செலவுகளைப்

பொருளாளரே தன் கைப்பணத்தைக் கொண்டு செய்து விடுகிறார். பாசனப்பங்கீடு, மற்றும் வாய்க்கால் பாரமரிப்புச் செலவினங்களை விவசாயிகளே ஏற்றுக்கொள்கின்றனர்.

## சிறு சச்சரவுகளைத் தீர்த்தல்

சாதாரணமாக விதி முறைகள் கையாளப் படுவதாலும், பொது ஆள் மூலம் நீர் பாய்ச்சுவதாலும் எந்தவிதச் சச்சரவும் ஏற்படுவதில்லை. அவ்வாறு ஏற்பட்டாலும் அந்த ஊரைச் சேர்ந்த சங்க உறுப்பினர்களே இந்தச் சச்சரவுகளைத் தீர்த்து வைத்து விடுகிறார்கள். சில சமயங்களில் பயிருக்குரிய நீர்த் தேவையின் பொருட்டு முறைப் பாசனத்தில் சில மாற்றங்கள் தேவைப்படலாம். அவ்வாறு ஒரு கிராமத்திற்கு மேற்பட்ட கிராமத்தினர் பிரச்சினையில் பங்கேற்கும் சூழ்நிலை ஏற்படும்போது சங்கப் பொறுப்பாளர்கள் 2-3 பேர் நேரடியாக அந்த இடங்களுக்குச் சென்று தீர விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார்கள். இத்தீர்ப்பைப் பாசனதாரர்கள் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

ஒரு முறை கடலைப் பயிருக்காக, வார முறைப் பாசனம் மேற்கொள்ளப்பட்டபோது தூசிக்கு கீழ் கிராம கடலைப் பயிர் வாடி விட்டது. அவர்கள் முறையில் சிறிது மாற்றம் செய்து வாடிய பயிருக்கு முன்னுரிமை கொடுத்து, நீர் அளிக்கக் கேட்டுக் கொண்டார்கள். சங்கப் பொருளாளர், அந்த இரு ஊர் உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து நிலத்தைப் பார்வையிட்டு, தேவையை உணர்ந்து முறையாகக் கிடைக்க வேண்டிய காலத்திற்கு 2 நாள் முன்பாகவே தண்ணீர் கொடுத்தனர். மேல் பகுதியினர் 2 நாள் கழித்துத் தங்கள் நிலங்களுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டனர். இது போன்ற சிறு சிறு சம்பவங்கள் தவிர பெரிய அளவில் பிரச்சினைகள் ஏதும் எழுவதில்லை.

ஒவ்வொரு மாதமும், பாசனக் காலத்தில் முன்னறிவிப்புக் கொடுத்து விட்டுப் பொதுக் குழு கூடுகிறது. அது சமயம் அவ்வப்போது எழுகின்ற பிரச்சனைகளை விவாதித்து முடிவு எடுக்கிறார்கள்.

## வாய்க்கால் சீரமைப்பு, பேணுதல்

சென்ற 12 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ராஜாக்கால் கால்வாயைச் சுத்தம் செய்து, ஆற்றில் வெள்ளம் வரும்போது கால்வாய் பிரியும் இடத்தில் பாலாற்றில் தடுப்பணை அமைத்துத் தண்ணீர் கொண்டு வரும் பழக்கத்தை முன்பே கண்டோம். இப்போது அந்தப் பணியில் இவர்கள் இறங்குவதே இல்லை என்றாலும், வயல் வாய்க்கால்களையும், பாசன வாய்க்கால்களையும் ஒவ்வொரு வருடமும் வண்டல் எடுத்து, களைச்செடி நீக்கி நீர் வரத்தை எதிர் நோக்கிச் சீர் செய்து வைத்திருப்பார்கள்.

அந்தந்த ஊர் உறுப்பினர்கள் முயற்சி எடுத்துப் பாசனதாரர்களின் ஒத்துழைப்போடு வாய்க்கால் வெட்டும் பணி மேற்கொள்ளப்படுகிறது. கடை மடைப் பகுதியில் விவசாயிக்குத் தான் நீர் கொண்டு வருவதில் அதிக சிரமம் இருப்பதால், இந்த வாய்க்கால் தூரெடுக்கும் பணியிலும் இவர்கள் பங்கு அதிகமாகவே இருக்கிறது. கடை மடைப் பகுதிக்காரர்கள் தங்களுடைய எல்லையில் உள்ள வாய்க்காலைச் சுத்தம் செய்து விட்டு அடுத்த ஊர் வாய்க்காலைச் சீர்செய்ய அந்தக் கிராமத்தவர்களோடு இவர்களும் சேர்ந்து அந்தப் பகுதி வாய்க்கால்களைச் சுத்தம் செய்வார்கள். அடுத்த எல்லைக்குச் செல்லும்போது இந்த இரு கிராமத்தோடு, மூன்றாவது ஊர்ப் பாசனதாரர்களும் சேர்ந்து சுத்தம் செய்வார்கள். உதாரணமாக மன்னூர் பாசனதாரர்கள் தங்கள் வாய்க்கால் சுத்தம் செய்யப்பட்டபின் மேலே உள்ள வடகல்பாக்கம் விவசாயிகளோடு சேர்ந்து வடகல் பாக்கம் வாய்க்காலையும் சுத்தம் செய்வர் பிறகு இருகிராமத்தவரும் மாமந்தூர் கிராம விவசாயிகளோடு இணைந்து மாமந்தூர் வாய்க்காலைச் சுத்தம் செய்வர்.

இது ஒவ்வொரு கிராமத்திற்கும் வேறுபடுகிறது. இதில் முதல் மடைக்காரர்களின் பங்கு மிகக் குறைவு. கீழே செல்லச் செல்ல அந்தந்தக் கிராமத்தின் பொறுப்பு அதிகரிக்கிறது. இதற்காகவும் செலவை அந்த ஊர்ப் பாசனதாரர்களே தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ளுகிறார்கள். இந்தப் பணி செம்மையாக நடந்து வருகிறது.

கான்கிரிட் வாய்க்கால் அமைக்கும் பணி ஏரிக்கரையில் இருந்து காஞ்சிபுரம்-செய்யாறு நெடுஞ்சாலை வரையிலான தலைமடைப் பகுதியில் மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கான்கிரிட் அடித்தளமும், பக்கவாட்டில்

கான்கிரிட் பலகைகளும் வைத்து வாய்க்கால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சீரமைக்கப்பட்ட வாய்க்கால்கள் மொத்த நீளத்தில் சுமார் மூன்றில் ஒரு பகுதியாகும்.

இதன் முக்கிய நோக்கம் ஏரியிலிருந்து தண்ணீர் திறந்தவுடன் வேகமாக இடைமடை, கடைமடைப் பகுதிகளுக்கு எளிதாகச் செல்ல வேண்டும் என்பதாகும். அதோடு கூட இந்த வாய்க்கால் பல கிராமங்களுக்குப் பாசனம் தர வேண்டியிருப்பதால் ஆங்காங்கே பிரிவு அமைப்புகளும், திருப்பு அமைப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில தவறுகள் ஏற்பட்டிருப்பதை முன்பே எடுத்துச் சொன்னோம். வாய்க்காலில் அமைக்கப்பட்ட கான்கிரிட் பலகைகள் தங்கள் வயலுக்கு நேரடியாக தண்ணீர் வர வேண்டும் என்ற நோக்கோடும், பிற உபயோகத்திற்காகவும் பல இடங்களில் நீக்கப் பட்டிருக்கின்றன.

## விளைவும் பயனும்

சங்கத்தின் முக்கிய குறிக்கோளான ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வருவதில் எந்த வித முன்னேற்றமும் இல்லை. அவர்கள் எடுத்த பல்வேறு முயற்சிகளும் பயனளிக்காதது, வருத்தமளிப்பதாகத் தான் இருக்கிறது. என்றாலும், கிடைக்கின்ற நீரை ஒரு பயிரேனும் எடுக்கக் கூடிய வகையில் எந்தெந்த ஊருக்குக் கொடுத்தால் சிறந்த முறையில் நீரின் பயன் கிடைக்கும் என்பதை முற்றிலுமாக உணர்ந்து அதற்கான விதிமுறைகளையும், கோட்பாடுகளையும் அமைத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் நீர் கிடைக்க வாய்ப்பில்லாதவர்கள் மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்கு வழி உண்டாகிறது.

நீர் கிடைக்கும் என்று எதிர் பார்த்துப் பயிர் விளைவித்து, பயிர் நீரின்றிச் சேதமுறுவதைத் தவிர்த்து, இருக்கின்ற நீரைக் குறிப்பிட்ட கிராமங்களுக்கு மட்டும் கொடுத்து பயிர் விளைவிக்கச் செய்வது ஒரு சிறந்த ஏற்பாடாகும். இவர்களின் திட்டமிடும் திறனையும், அதை மதித்து நடக்கும் பாசனதாரர்களையும் போற்றத்தான் வேண்டும். இதன் மூலம் பயிர் இழப்பு தவிர்க்கப்படுகிறது. எல்லோரும் கொஞ்ச நீருக்காக தங்களுக்குள் சண்டை

போட்டுக் கொண்டு பயிர் முழுமையாக முதிர்ச்சி அடையும் நிலை வரை போதுமான நீரினால் நஷ்டமடைவது தவிர்க்கப்பட்டிருக்கிறது.

பாசனம் பெறும் விவசாயிகள் ஒரு பயிரை முழுமையாக விளைவிக்க முடிகிறது. உற்பத்தி பெருகுகிறது. கிடைக்கின்ற நீரை நீர்க்கட்டி மூலம் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கும் பாங்கு ஒரு சிறந்த செயல்பாடாகும். நீர்க்கட்டி வைத்து நீர்ப்பாய்ச்சும் பழக்கம் பல நூறு ஆண்டுகளாக இருந்து வந்தாலும் அதைத் தங்களுடைய அனுபவத்தால் செம்மைப் படுத்தியிருக்கிறார்கள்.

வாய்க்கால் நீர் ஏறிப் பாய முடியாத மேட்டுப்பகுதிகளுக்கு, தற்காலிக தடுப்பு அணை அமைத்து அதிலும் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் தடுப்பணை அமைத்து நீர் பாய்ச்சுவது ஒரு சிறந்த தொழில் நுட்பமாகும். நீர் எளிதாகப் பாய வேண்டும் என்பதற்காக நிலத்தை சமன்படுத்தும் முயற்சியில் ஈடுபடாமல், நிலத்தின் அமைப்பில் எந்தவித மாற்றமும் செய்யாமல் மண் வளம் குன்றாமல், மேடான இடங்களுக்கு நீரை ஏற்றிப் பாய்ச்சுவது பிற இடங்களில் பின்பற்றக் கூடிய ஒன்றாகும். இதன் மூலம் பாசனதாரர்களின் நிலம் மேட்டுப் பகுதியில் இருந்தாலும், தாழ்வான பகுதியில் இருந்தாலும், கடைமடையில் இருந்தாலும் எல்லொருக்கும் சீராக நீர் கிடைக்கிறது.

நீர் சிறந்த முறையில் பங்கீடு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் சீராகக் கிடைக்கும் வகையில் பாசனம் மேற்கொள்ளப்படுவதால் வருமானமும் கூடி உள்ளது. அந்தந்தக் கிராமத்தில் எழும் பிரச்சனைகளை அந்தந்தக் கிராமத்து உறுப்பினரே தீர்த்து வைத்து விடுவதால், சின்னச் சின்ன விசயங்கள் பெரிதுபடுத்தப் படாமல் தங்களுக்குள்ளேயே தீர்த்து வைக்கப்படுகின்றன. இதனால் சண்டைகள் குறைகின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்கள், ஒரே ஆதாரம் மூலம் நீர் பெற்றாலும் அவர்களுக்குள் எழும் பிரச்சனைகளைச், சங்கம் தீர்த்து வைப்பது, பிணக்குகளைக் குறைக்கின்றன.

நீரைத் திறந்து விடுவதில் சங்கத்திற்கும், அரசு நிர்வாகத்திற்கும் சுமுகமான சூழ்நிலை நிலவுகிறது. இதனால் தேவைப்படும் போது, தேவைப்படும் அளவுகளில் நீர் எடுத்துக் கொண்டு ஏரி நீர் நீண்ட நாள் வர வழி கோலுகிறது என்றாலும் பல லட்ச ரூபாய் செலவில் பாசனதாரர்களுக்காகச் செய்யப்படும் ஏரி சீரமைப்புப் பணி இந்தச்

சங்கத்தையோ, கிராமத்தில் உள்ளவர்களையோ கலந்து ஆலோசிக்காமல் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதனால் தேவையறிந்து திட்டமிடப்படவில்லை எனக் கிராமத்தினர் கருதுகின்றனர்.

இந்தச் சீரமைப்புப் பணியைக் காண்ட்ராக்ட் மூலம் எங்கோ உள்ள ஒருவர் வந்து செயல்படுத்துகிறார். அவருக்கு இந்த ஏரிமீதோ அல்லது ஏரியில் பாசனம் பெறுபவர்கள் மீதோ எந்தவித ஈடுபாடும் கிடையாது. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பலமுறை இந்த கிராமங்களில் உள்ள ஒருவரை ஒப்பந்தக்காரராக வைத்துப் பணியை மேற்கொள்ள வைக்க எடுத்த முயற்சியை அரசு ஏற்றுக் கொள்ளாதது அவர்களுக்கு ஏமாற்றமாகவே உள்ளது.

இந்தச் சங்கத்திற்கு என்று எந்தவிதச் சொத்தும் கிடையாது. இவர்கள் வேறு பணியில் ஈடுபடுவது இல்லை. இவர்களின் ஈடுபாடும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது. சென்ற 10 ஆண்டுகளாக நீர் வரத்துக் குறைந்த நிலையில் மேட்டு நிலம் மற்றும் கடைமடைப் பகுதியிலும் நெல்லுக்குப் பதில் மாற்றுப் பயிர் செய்யப்படுகிறது. குறைந்த நீர் தேவைப்படும் கடலை போன்ற பயிர்கள் நிலத்தடி நீரை உபயோகித்துப் பயிர் செய்யப்படுகின்றன. இந்தப் பகுதியில் அதிக அளவில் கிணறுகள் வந்து கொண்டு இருக்கின்றன. இவ்வாறு வசதி படைத்தவர்கள் கிணறு தோண்டிப் பாசனம் மேற்கொண்டாலும், சிறு குறு விவசாயிகள் கிணறு வெட்ட வசதியில்லாதவர்கள் நிலைமை மோசமாகிக் கொண்டுதான் இருக்கிறது. இங்கு 583 கிணறுகள் உள்ளன.

## நடப்பு நிலைமை

மோசமான அளவே தண்ணீர் கிடைப்பதால் மொத்த பரப்பான 4118 ஏக்கரில் பாதி நிலத்திற்குக்கூட பாசனம் அளிக்க முடியாத சூழ்நிலை நிலவுகிறது. பாசன பற்றாக்குறையை ஈடுகட்ட உழவர்கள் கடலை பயிர் செய்கின்றனர். சிலர் கரும்பு சாகுபடி மேற்கொண்டுள்ளனர். பெரும்பாலோர் கடலை, கேழ்வரகு பயிரிடுகின்றனர்.

சிறந்த முறையில் செயல்பட்டு வந்த சங்கம், நீர்ப் பற்றாக்குறையால் செயல் இழந்த நிலையில் காணப்படுகிறது. வசதியான பாசனதாரர்கள் ஏரியினால் நிலைப்படுத்தப்பட்ட நிலத்தடி நீரை உபயோகித்துச் சாகுபடி மேற்கொள்ளத் துவங்கினர். வாய்க்கால் மூலம் வரும்

நீரை மட்டும் நம்பிப் பயிர் செய்ய வேண்டிய சூழ்நிலை குறைந்துவிட்டது. இதனால் நீர் கொண்டு வருவதற்கும், நீரைப் பாய்ச்சுவதற்கும் ஏற்படும் இன்னல்களை ஏற்க அவர்கள் முன் வருவதில்லை. ஒதுங்கி விடுகிறார்கள்.

அரசு இயந்திரமும், அரசோச்சும் அரசியல் சூழ்நிலையால் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில்லை. ஆகவே, சங்கத்தைப் பெரிய திட்டங்களை செயல் படுத்துவதிலோ, மற்றவற்றிலோ ஈடுபடுத்துவதில்லை என்ற குறை பாசனதாரர்களிடம் மேலோங்கியுள்ளது. நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கான முயற்சி ஏதும் மேற் கொள்ளப்படவில்லை.

ஏரிப் பகுதியின் முக்கியப் பகுதியான நீர் ஆதாரப் பெருக்கம் கனவாகவே இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டேயிருக்கிறது. நீர் மூலத்தைப் பெருக்க தக்க நடவடிக்கை எடுத்தால்தான் பாசனப் பகுதி முழுவதும் பயன்பெற முடியும். பல எதிர்பார்ப்புகளோடு சங்கம் அமைக்கப்பட்டது. அவர்கள் எல்லா முயற்சிகளையும் தளராது எடுத்தனர், எடுத்து வருகின்றனர் என்றாலும் பிரச்சனை அவர்கள் முயற்சிக்கு எட்ட முடியாத தூரத்தில் இருக்கிறது. கட்டமைப்புகள் செம்மைபடுத்தப்பட்டும், கரை பலப்படுத்தப்பட்டும், வாய்க்கால்கள், பிரிவுகள் பலப்படுத்தப்பட்டும் நீர் ஆதாரம் விரிவுபடுத்தப்படாத நிலையில் வாடிய பயிரைக் கண்டு வாடினேன் என்பது போல கிராமத்து மக்கள் இருக்கிறார்கள்.

வெற்றியாக முடிய வேண்டிய தூசி மாமந்தூர் ஏரியின் கதை, சோகத்தை நோக்கி நடைபோடுவது போல் தோன்றுகிறது. அரசு ஏதேனும் முயற்சி எடுத்து நீர் மூலத்தைப் பெருக்கினால்தான் வழி உண்டு. உலகவங்கி உதவியோடு செயல்படுத்தப்பட இருக்கிற 'நீர் வள ஒருங்கிணைப்புத் திட்டத்தில்' தண்டரையிலிருந்து தூசி ஏரிக்குச் செய்யாற்று நீர் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. எங்கோ ஒரு ஒளி தோன்றுகிறது. வழிபிறக்கட்டும்.

## இணைப்பு 1

## தூசி மாமந்தூர் ஏரி பாசனப் பகுதி -

## கிணறுகள்

| கிராமம் | பாசனப் பரப்பு | கிணறுகள் எண்ணிக்கை | | பிற |
| --- | --- | --- | --- | --- |
| | | மின் இணைப் புடன் | டீசல் என்ஜின் | |
| **தலை மடைப் பகுதி** | | | | |
| 1. வாகை | 65 | 1 | 1 | - |
| 2. தூசி | 446 | 10 | 1 | 2 |
| 3. குரங்கினில் முட்டம் | 179 | 8 | 3 | 2 |
| 4. மாமந்தூர் | 991 | 23 | 39 | 2 |
| 5. நரசமங்கலம் | 110 | 15 | 5 | 12 |
| **இடைமடைப்பகுதி** | | | | |
| 6. சாணி கிளுப்பை | 111 | 4 | 1 | – |
| 7. கீழ் நாயக்கன் பாளையம் | 254 | 17 | 4 | 4 |
| 8. மேனல்லூர் | 165 | 11 | 2 | 4 |
| 9. வளவந்தல் | 236 | 41 | 6 | 6 |
| 10.வடக்கல் பாக்கம் | 230 | 13 | 6 | 11 |
| 11. கிரிஜாபுரம் | 118 | 19 | 3 | — |
| 12. சோதியன் பாக்கம் | 135 | 37 | 2 | 23 |
| **கடைமடைப்பகுதி** | | | | |
| 13. பல்லாவரம் | 404 | 44 | 1 | 10 |
| 14. சேனைய நல்லூர் | 103 | - | – | |
| 15. பூனை தாங்கல் | 146 | 24 | | |
| 16. பாகவந்தபுரம் | 107 | 22 | 13 | 14 |
| 17. இலாச்சேரி | 327 | 28 | 2 | 47 |
| 18. அழிங்கல்பட்டு | 14 | 5 | 2 | 5 |

## இணைப்பு 2
## அருஞ்சொல் விளக்கம்

| | | |
|---|---|---|
| இசா - பெரிய ஏரி | - | Big Tank |
| உழவுசால் | - | Plough Furrows |
| கலிங்கு - மிகுதி நீர்ப்போக்கு | - | Surplus Weir |
| கொண்டம் - தடுப்பணை | - | Crossbund |
| கொண்டம் கட்டி - நீர்கட்டி | - | Irrigator |
| தடுப்பணை - கொண்டம் | - | Cross bund |
| நீர்கட்டி | - | Irrigator |
| நீர்பிடிப் பகுதி | - | Catchment area |
| நீர்வள ஒருங்கிணைப்புத் திட்டம் | - | Water resource consolidation project |
| பகிர்வு அமைப்பு | - | Proportional dividers |
| பணி ஆய்வாளர் | - | Work Inspector |
| பிரிவு அலுவலர் | - | Section officer |
| புறவாய்க்கால் | - | Extreme channels / Pereferal Channel |
| மடை | - | Outlet |
| மதகு | - | Sluice |
| மிகுதி நீர் | - | Surplus Water |
| மேம்பாட்டு வரி | - | Betterment levy |

*முகவரி*


*தூசிமாமண்டூர் இசா ஏரிப்பாசன விவசாயிகள் சங்கம்*

*தூசி அஞ்சல் 631 702*

*செய்யாறு வட்டம்*

*திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்*